26th December 1956]

Sri M. KALYANASUNDARAM : நான் ஆஸ்பத்திரியிலே நோயாளியாக இருந்த அனுபவத்தைக்கொண்டு சொல்கிறேன்.

Sri K. VINAYAKAM : " நர்சுகளைக் கலந்து " என்பதற்கு உண்மையான பொருள் என்ன ? (சிரிப்பு.)

Sri S. DAIVASIGAMONEY : நண்பர் ஸ்ரீ பாலகிருஷ்ணன் அவர்கள் கேள்வி கேட்டபொழுது, " தெய்வத் தன்மை வாய்ந்த பெண் நர்சுகளுக்கு அலவன்சு அதிகமாக கொடுக்கப்படுமா ? " என்று கேட்டார்கள். பெண் நர்சுகள் என்று சொல்கிறபோது ஆண் நர்சுகள் பாதிக்கப்படுகிறார்கள். தெய்வத் தன்மை வாய்ந்த பெண் நர்சுகள் என்றால், ஆண் நர்சுகள் தெய்வத் தன்மை அல்லாத பிசாசுகளா என்று நான் கேட்கிறேன். (மீண்டும் சிரிப்பு.)

DEPUTY SPEAKER : Sri N. K. Palanisamy will put his question (No. 423).

Sri S. RAMALINGAM : The previous question is an important question, Sir. We want to put more supplementary questions.

DEPUTY SPEAKER : No, I have passed on to the next question.

Sri K. T. RAJU : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, " இது என்ன முக்கியம் ? " என்ற முறையில் தாங்கள் கூறிவிட்டீர்கள். ஆனால், கனம் அங்கத்தினருக்கு ரொம்ப முக்கியமாக இருக்கிறதாகையால், அந்த முக்கியமான விஷயத்தைப்பற்றிய கேள்வியை தயவு செய்து அனுமதிக்குமாறு வேண்டிக்கொள்கின்றேன்.

Crop control in the Mettur canal area

* 423 *Q.*—**Sri N. K. PALANISAMY :** Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Government have imposed any crop control in the ayacut of the Mettur canal during 1956; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI R. SHANMUGA RAJESWARA SETHUPATHI : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

Sri N. K. PALANISAMY : மேட்டூர் கால்வாய் பிரதேசத்தில் பயிர்க் கட்டுப்பாடு இல்லை. ஆனால், அதேசமயத்தில், கீழ் பவானி பாசனப்பிரதேசத்தில் பயிர்க் கட்டுப்பாடு இருக்கிறது. ஒரு பகுதியில் பயிர்க் கட்டுப்பாடு வைத்துக்கொண்டு, இன்னொரு பகுதியில் வைக்காமல் இருப்பதற்குக் காரணம் என்ன ?

The Hon. Sri R. SHANMUGA RAJESWARA SETHUPATHI : புதுத் திட்டமாக வந்திருக்கிறபடியினாலே தண்ணீருடைய நிலைமை எப்படியிருக்குமோ என்பதற்காக முதலிலே பயிர்க்கட்டுப்பாடு வைத்திருக்கிறார்கள். அதை நீக்குவதற்கும் நடவடிக்கை நடந்துகொண்டிருக்கிறது.

Sri K. T. RAJU : லோயர் பவானி ப்ராஜெக்ட் பிரதேசத்தில் இருக்கக் கூடிய பயிர்க் கட்டுப்பாட்டை ரத்து செய்யக் கூடிய யோசனை சர்க்காருடைய கவனத்தில் இருக்கிறதா ? பயிர்க் கட்டுப்பாட்டை ரத்து செய்யவேண்டுமென்ற எண்ணம் சர்க்காருக்கு உண்டா ?

[26th December 1956

The Hon. Sri R. SHANMUGA RAJESWARA SETHUPATHI : ஏற்கனவே conference போட்டு நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

Sri G. GOVINDAN : கனம் அங்கத்தினர் திரு. முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் சபைக்குள் குடையைக் கொண்டுவருகிறார். அப்படிக் கொண்டு வரலாமா என்று அறிய விரும்புகிறேன்.

DEPUTY SPEAKER : The hon. Member should leave his umbrella outside.

Second-class Language Test

* 424 *Q.*—Sri P. RANGASWAMI REDDIAR : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether there are any munshis, pandits, tutors, appointed by the Government to teach Government servants, any one of the languages prescribed for passing the second-class language test other than Tamil; and

9.40 a.m. (*b*) if not, what facilities are afforded by the Government to enable Government servants to learn and pass a Language Test?

The Hon. Sri C. SUBRAMANIAM : (*a*) The answer is in the negative.

(*b*) No facilities are afforded by Government; the need for such facilities has not so far arisen.

Sri P. RANGASWAMI REDDIAR : சர்க்கார் உத்தரவு நெம்பர் எம். எஸ். **3298**, ஹோம், 10-ந் தேதி நவம்பர் **1954** பிரகாரம் நம்முடைய நாட்டில் டெப்யூடி கலெக்டர், ஜில்லா முன்சீப், சப் மாஜிஸ்டிரேட் முதலான உத்தியோகஸ்தர்கள் கன்னடம், மலையாளம், தெலுங்கு, உருது, ஹிந்தி, தமிழ் ஆகிய மொழிகளில் தமிழை கட்டாயமாகவும், மற்ற மொழிகளில் ஒன்றை அவசியம் படித்து **second class language test** பாஸ் செய்ய வேண்டுமென்ற நியதி இருக்கிறது. **1956**ம் வருஷம் நவம்பர் மாதம் **1**-ந் தேதிக்குப் பிறகும் இது அமுலில் இருக்கவேண்டிய அவசியமென்ன? அவர்கள் உண்மையாகவே அந்த மொழிகளில் பயிற்சி பெற்று பாஸ் செய்வதற்கு சர்க்கார் வசதி செய்து கொடுக்காமல் அவர்கள் எப்படி பாஸ் செய்வார்கள்? இல்லாவிட்டால் அவர்கள் போலியாகத்தான் பாஸ் செய்ததாகத் தெரியும்.

The Hon. Sri C. SUBRAMANIAM : இது பல ஆண்டுகளாக அமுலில் இருந்துகொண்டு வருகிறது. இது வரையில் இதுபற்றி யாருக்கும் கஷ்டம் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. **1956**-ம் வருஷம் நவம்பர் மாதம் **1**-ந் தேதிக்குப் பிற்பாடு இரண்டாவது மொழி ஒன்றில் தேரவேண்டுமென்கின்ற விதி அவசியமா, இல்லையா, அவசியமென்றால் எந்த மொழி பற்றி அவசியமாக இருக்க வேண்டுமென்பதைப்பற்றி யெல்லாம் இப்போழுது அரசாங்கம் பரிசீலனை செய்துகொண்டு வருகிறது,

Seed farms

* 425 *Q.*—Sri P. RANGASWAMI REDDIAR : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) the number of seed farms started by the Government in 1956;